# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி

## 30.09.2022 மன்ற கூட்ட நடவடிக்கைகளின் நகல்

நிகழும் ஸ்ரீ சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 13 ம் தேதி ஆங்கில ஆண்டு 30.09.2022 ம் தேதி வெள்ளிகிழமை பிற்பகல் 02.30 மணிக்கு மேட்டூர் நகர்மன்றத்தில் சாதாரண கூட்டம் நகர்மன்ற தலைவர் தலைமையில் நடைப்பெற்றது.

**நாள் : 30.09.2022**
**இடம்: மேட்டூர் அணை.**

**நகர்மன்ற தலைவர்,**
**மேட்டூர் நகராட்சி.**

**மன்றப்பொருள்**

1. நகராட்சி ஆணையாளரின் செப்டம்பர்–2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.139 நாள்.30.09.2022**

**பதிவு செய்யப்பட்டது.**

2. இயக்குநர், தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவம் கோயமுத்தூர் அவர்களின் 13.09.2022ம் தேதிய கடித ந.க.எண்.323/19/அ3 மற்றும் 19.09.2022ம் தேதிய கடித ந.க.எண்.754/18/அ3 ஆகிய கடிதங்களில் இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 3 நாட்கள் பயிற்சி வழங்குவதாகவும் நபர் ஒன்றுக்கு 3 நாட்கள் உணவு மற்றும் தங்குமிடத்திற்க்கான கட்டணம் ரூ3,000/– செலுத்த கோரி கடிதம் வரபெற்றுள்ளது.

| வ.எண் | பணியாளர் பெயர் | பயிற்சியின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | திருமதி. தனலட்சுமி பதிவு எழுத்தர் | Managing And Flourishing In Dual Role | **3000/–** |
| 2 | திரு.மாதுலிங்கம், இளநிலை உதவியாளர் | பணி ஒய்வு குறித்து திட்டமிடுதல் பயிற்சி | **6000/–** |
| 3 | திரு.பரணிதரன் ஒட்டுநர் | | |

எனவே மேற்கண்ட பயிற்சியில் பணியாளர்கள் கலந்து கொள்ளும் பொருட்டு மொத்தம் ரூபாய்.9000/– செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவினத்தின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியே எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3765/09/சி1)**
**தீர்மான எண்.140 நாள்.30.09.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

3. இயக்குநர், தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம், கோயமுத்தூர் அவர்களின் 23.08.2022–ம் தேதிய ந.க.எண்.471/22/அ2 மின்னஞ்சல் கடிதத்தின்படி 2022–2023–ஆம் ஆண்டுக்கு ரூ.1,25,000/– ஆண்டு சந்தா தொகையாக செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே

மேற்கண்ட தொகை ரூ.1,25,000/— கோயமுத்தூர் தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்தவும் அதற்கான செலவித்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்பகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3765/09/சி1)**
**தீர்மான எண்.141 நாள்.30.09.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

4. இந்நகரட்சியில் சர்க்கார் தோட்டம், கோம்புரான் காடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 5.452 MLD OCEMS பொருத்தும் பணிக்கு ரூ.48,00,000/—மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 20.09.2022ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | M/S HITECH Engineering<br>12, Vijaya Gardern Round Road, Dindigul | (—)0.11% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S VV Traders,<br>39, B Society Street West | (+)2.54% மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விகிதத்தை விட (—) 0.11% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதம் கொடுத்துள்ள M/S HITECH Engineering ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. மேலும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.115 நாள்.30.08.2022—ல் அனுமதி அளிக்கப்பட்டதின்படி இப்பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து கூடுதலாக ஆகும் தொகையினை நகராட்சி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2574/2022/இ1)**
**தீர்மான எண்.142 நாள்.30.09.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

5. இந்நகரட்சியில் தங்கமாபுரிபட்டிணம் வாரசந்தை அருகில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 0.924 MLD OCEMS பொருத்தும் பணிக்கு ரூ.41,72,000/—மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 20.09.2022ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | M/S HITECH Engineering<br>12, Vijaya Gardern Round Road, Dindigul | (—)0.14% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S VV Traders,<br>39, B Society Street West | (+)3.27% மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விகிதத்தை விட (–) 0.14% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதம் கொடுத்துள்ள M/S HITECH Engineering ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**(ந.க.எண்.2574/2022/இ1)**
**தீர்மான எண்.143 நாள்.30.09.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

6. இந்நகராட்சியில் சேலம் கேம்ப் காந்தி நகர் சுத்திகரிப்பு நிலையத்தில் 0.924 MLD OCEMS பொருத்தும் பணிக்கு ரூ.41,72,000/–மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 20.09.2022ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | M/S HITECH Engineering 12, Vijaya Gardern Round Road, Dindigul | (–)0.14% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S VV Traders, 39, B Society Street West | (+)3.27% மதிப்பீட்டை விட அதிகம் |

<u>**அலுவலக குறிப்பு**</u>

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விகிதத்தை விட (–) 0.14% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதம் கொடுத்துள்ள M/S HITECH Engineering ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**(ந.க.எண்.2574/2022/இ1)**
**தீர்மான எண்.144 நாள்.30.09.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

7. இந்நகராட்சியில் மினிபவர் பம்புகளின் மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு ரூ.8,00,000/–மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 09.09.2022ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | M/S Best Engineering 160 E, KGS complex Wrokshop corner, Mettur Dam | (–)0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | S.P.P. என்டர்பிரைசஸ், 2/122, சேலம் மெயின் ரோடு சாம்பள்ளி | (+)0.01% மதிப்பீட்டை விட அதிகம் |

<u>**அலுவலக குறிப்பு**</u>

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விகிதத்தை விட (–) 0.02% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதம் கொடுத்துள்ள M/S Best Engineering ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**(ந.க.எண்.3106/2022/இ1)**
**தீர்மான எண்.145 நாள்.30.09.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

8. இந்நகரட்சியில் ஆடி18– திருவிழாவிற்கு வாடகை அடிப்படையில் மின் விளக்குகள், ஜெனரேட்டர், துணி மாற்றும் ,அறைகள் தடுப்புகள் அமைத்தல் பணிக்கு ரூ.3,50,000/–மதிப்பீட்டில் 29.07.2022ந் தேதி ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | K.கோவிந்தன், மேட்டூர் | (–)0.26 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S.Siva Sakthi Vinayaga Constructions, வெள்ளாளபட்டி, மேட்டூர்–636458 | (+)2.19 % மதிப்பீட்டை விட அதிகம் |

பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.கோவிந்தன், மேட்டூர் என்பவரின் ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டை விட(–)0.26% குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.கோவிந்தன் என்பவரின் விலைகுறைவாக உள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

ஆடி 18 திருவிழாவை கருத்தில் கொண்டு உடனடியாக பணியினை செய்ய வேண்டியிருந்ததால் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 2907/2022/இ1)**
**தீர்மான எண்.146 நாள்.30.09.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

9. மேட்டூர் நகராட்சியில் 15th CFC 2022–2023 (Tied Grant) நிதியின் கீழ் நகர்புற காடுகளை உருவாக்கும் பணிக்கு 7410 மரங்கள் நடும் பணிக்கு 13.09.2022 –ல் ஒப்பந்த புள்ளிகோரியதில் பெறப்பட்ட மூன்று ஒப்பந்த புள்ளிகளில் Tenders Tamilnadu(The Tamilnadu Government EProcurment system ) இணையதளம் வழியே M/S..S.V.V ONSITE 14/2 பேளூர்ரோடு,வாழப்பாடி என்கிற ஒப்பந்ததாரர் ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார் மேற்படி ஒப்பந்ததாரர் EMD செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்படுவதற்கான (M.S.M.E) சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பதிவு செய்யப்படும் உதயம்(Government of india) அமைச்சகத்தின் பதிவினை ஒப்பந்தபுள்ளியில் இணைத்துள்ளார். ஆனால் இப்பதிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள பணிகளில் மரங்கள் நடும் பணிக்கு EMD விலக்களிக்கப்பதற்கான குறிப்பு ஏதும் இல்லை. எனவே M/S.S.V.V Onsite ஒப்பந்ததாரர் EMD செலுத்தாத காரணத்தால் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க இயலவில்லை. எனவே கீழ்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம்

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | I.மணிவண்ணன் , சின்ன முனியப்பன் கோவில் ,பின்புறம் சின்ன திருப்பதி,சேலம். | (–) 0.18% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | S.கார்த்திகேயன் | (+) 1.03% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி இரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல்படி திரு.I.மணிவண்ணன், சின்னதிருப்பதி, சேலம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைக் காட்டிலும் 0.18% குறைவாக உள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.I.மணிவண்ணன், சின்னதிருப்பதி, சேலம். என்பவரின் ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டை விட 0.18% குறைவாக உள்ளதால் ஏற்கலாம். மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 26.08.2022–ந் தேதிய ந.க.எண்.18600/2022/CFC-1 கடிதத்தின்படி மேற்படி பணியினை 30.09.2022–க்குள் நிறைவு செய்யப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டதின் பேரில் நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்

**(ந.க.எண்.3679/2022/இ1)**

**தீர்மான எண்.147 நாள்.30.09.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

10. மேட்டூர் நகராட்சி புதிய குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.42 நாள்.28.02.2020–ன்படி அனுமதி பெற்று சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநராக முதுநிலைப் பொறியாளரின் 25.08.2020–ம் தேதிய ந.க.எண்.28181/2019/DO1 கடிதத்தின்படி அனுமதி வழங்கப்பட்டு 01.01.2021 முதல் 31.12.2021 முடிய திருவாளர்.KPS Engineering Construction, Mettur (திருமதி.சுதா/தியாகராஜன்) ஒப்பந்ததாரர் மூலம் புதிய குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தக்காலம் 31.12.2021ல் முடிவடைந்ததால் மீண்டும் புதிய குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 03.12.2021ல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திட்டபிரேரணை அனுப்பப்பட்ட நிலையில் அவசர அவசியம் கருதி இந்நகர் மன்ற தீர்மான எண்.161 நாள்.30.12.2021–ன்படி 01.01.2022 முதல் 30.06.2022 முடிய உள்ள காலத்திற்கு ஒப்பந்தகாலம் நீட்டிப்பு செய்யப்பட்டது.

அதன்படி நீட்டிப்பு செய்யப்பட்ட ஒப்பந்தக்காலம் 30.06.2022ல் முடிவடைந்ததால் இந்நகர் மன்ற தீர்மான எண்.68 நாள்.28.06.2022–ன்படி 01.07.2022 முதல் 30.09.2022 முடிய உள்ள காலத்திற்கு ஒப்பந்தகாலம் நீட்டிப்பு செய்யப்பட்டது. மேற்படி ஒப்பந்தக்காலம் 30.09.2022–ல் முடிவடைவதால் புதிய குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், பொதுமக்களின் நலன் கருதியும், திருவாளர்.KPS Engineering Construction, Mettur (திருமதி.சுதா/தியாகராஜன்) நிறுவனத்தின் 20.09.2022-ந் தேதிய கடிதத்தில் தொடர்ந்து அதே விலை விகிதத்தில் செய்ய சம்மதம் தெரிவித்துள்ளதாலும் மீண்டும் மூன்று மாதங்களுக்கு 01.10.2022 முதல் 31.12.2022 வரை ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின்படி தற்போது புதிய குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வரும் திருவாளர்.KPS Engineering Construction, Mettur (திருமதி.சுதா/தியாகராஜன்) ஒப்பந்ததாருக்கு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தகாலத்தை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4495/2016/இ1)**

**தீர்மான எண்.148 நாள்.30.09.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

11. சேலம் மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் ந.க.எண்.154/செ.ம.தொ.அ/2022 நாள்.06.07.2022–ன்படி மாலை மலர் நாளிதழில் 30.08.2022 அன்று வெளியிட உள்ள தொழில் மலரில் இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் பற்றி விளம்பரம் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மாலை மலர், தொழில் மலர் 2022ல். இந்நகராட்சி திட்டங்கள்

பற்றி பிரசுரம் செய்யப்பட்டது. எனவே Malar Publication Limited நிறுவனத்திடமிருந்து விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ.9,900/– செலுத்தக்கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்படி விளம்பர கட்டணத்தினை மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1743/2021/இ1)**

**தீர்மான எண்.149 நாள்.30.09.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

12. மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட புதிய வார்டு எண்.07 தங்கமாபுரிபட்டிணம் பகுதியில் காந்தி பூங்கா அமைக்கும் பணிக்கு திட்ட பிரேரணை 09.05.2022–ந் தேதிய இவ்வலுவலக ந.க.எண்.835/2021/இ1 கடிதம் மூலம் அனுப்பப்பட்டது.

அதனை தொடர்ந்து மத்திய அரசு பங்களிப்பு ரூ.7.12 இலட்சம் மாநில அரசு பங்களிப்பு ரூ.4.27 இலட்சம் மற்றும் நகராட்சி பங்களிப்பு ரூ.14.61 இலட்சம் ஆக மொத்தம் ரூ.26.00 இலட்சம் மதிப்பீட்டில் தொழில்நுட்ப அனுமதி பெற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் 14.09.2022ந் தேதிய மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட விவரப்படி தங்கமாபுரிபட்டிணம் பகுதியில் காந்தி பூங்கா அமைக்கும் பணிக்கு நகராட்சி பங்களிப்பு ரூ.14.61 இலட்சத்திற்கும் மேலும் மேற்படியினை ரூ.26.00 இலட்ச மதிப்பீட்டில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.835/2021/இ1)**

**தீர்மான எண்.150 நாள்.30.09.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி

## 30.09.2022 மன்ற கூட்ட நடவடிக்கைகளின் நகல்

நிகழும் ஸ்ரீ சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 13 ம் தேதி ஆங்கில ஆண்டு 30.09.2022ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு மேட்டூர் நகர்மன்ற கூடத்தில் அவசர கூட்டம் நகர்மன்ற தலைவர் தலைமையில் நடைப்பெற்றது.

**நாள் : 30.09.2022**
**இடம்: மேட்டூர் அணை.**

**நகர்மன்ற தலைவர்,**
**மேட்டூர் நகராட்சி.**

**மன்றப்பொருள்**

1. மேட்டூர் நகராட்சி கணிணி பிரிவில் உள்ள Sharp AR 6031N XEROX இயந்திரம் தற்போது பழுதடைந்துள்ளதால், அலுவலகத்தில் அத்தியாவசிய கோப்புகளின் பிரதிகளை நகல் எடுக்க இயலாமல், பணிகளில் தாமதம் ஏற்படுகிறது. மேலும், அவசரப் பணிகளை மேற்கொள்ள தாமதம் ஏற்படுகிறது, என உதவி கணினி திட்ட அமைப்பாளரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே உடனடியாக (XEROX) ஒளி நகல் எடுக்க இயந்திரத்தின் பழுதினை சரி செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.23,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2590/2021/இ1)**
**தீர்மான எண்.151 நாள்.30.09.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

2. தருமபுரி பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் உள்ளூர் பகுதி வளர்ச்சித் திட்டம் 2019—2020—ன் கீழ் மேட்டூர் நகராட்சி சதுரங்காடி பகுதியில் உயர்மின் கோபுர விளக்கு ரூ.9.50 இலட்ச மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு சேலம் மாவட்ட ஆட்சியர் அவர்ளின் 10.08.2022—ந் தேதிய ந.க.எண்.243/2022/அ2 செயல்முறை உத்தரவின்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 2721/2022/இ1)**
**தீர்மான எண்.152 நாள்.30.09.2022**

**பதிவு செய்யப்பட்டது.**

**3.** மேட்டூர் நகராட்சியின் மேற்கு பிரதான சாலையில் சின்னபார்க் முதல் பேருந்து நிலையம் வரை, பேருந்து நிலையம் முதல் பொன்னகர் பிரிவு வரை மங்கை கட்பீஸ் முதல் காந்தி சிலை வரை, காந்தி சிலை முதல் மோகன் டீ கடை வரை, காந்தி சிலை முதல் இலட்சுமி விலாஸ் வங்கி வரை உள்ள சாலைகளில் சென்டர் மீடியன் அமைத்து புதிய கம்பத்துடன் தெருவிளக்குகள்

பொருத்தி விளம்பரதாரர்கள் மூலம் பராமரித்துக் கொள்ள திருவாளர் Sai advertisers அவர்கள் கோரியுள்ளார்.

மேற்கண்ட பகுதிகள் மேற்கு பிரதான சாலை முதல் பேருந்து நிலையம் வரை உள்ள சாலை 450 மீ நீளம் 8 மீ அகலம், பேருந்து நிலையம் முதல் பொன்னகர் பிரிவு வரை 240 மீ நீளம் 10 மீ அகலம், மங்கை கட்பீஸ் முதல் காந்தி சிலை வரை 100 மீ நிளம் 12 மீ அகலம், காந்தி சிலை முதல் மோகன் டீ கடை வரை 90 மீ நீளம் 6 மீ அகலம், காந்தி சிலை முதல் லட்சுமி விலாஸ் வங்கி வரை 170 மீ நீளம் 12 மீ அகலம், உள்ளது.

மொத்த 1050 மீ நீள சாலையில் பொருத்தப்படும் மீன்விளக்குகளுக்கான, மின் கட்டண தொகையை பராமரிப்பு செலவுகளுடன் விளம்பரதாரரே செலுத்தி கொள்ளவும், மேற்குறிப்பிட்டுள்ள காந்தி சிலை முதல் மோகன் டீ கடை வரை உள்ள சாலை 6 மீ அகலம் உள்ள சாலையாக இருப்பதால், சென்டர்மீடியன் பொருத்தாமல் மின் விளக்குகள் அமைக்கவும், பேருந்து நிலையம் முதல் பொன்னகர் பிரிவு வரை உள்ள சாலையில் பேருந்து நிலையம் ஸ்டேட் பேங்க் மற்றும் மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து வாகனங்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் சென்டர் மீடியம் பொருத்தி பேருந்து மற்றும் வாகன போக்குவரத்திற்கு இடையூறு இல்லா வண்ணம் நகராட்சியால் வழங்கப்படும் விதி முறைகளுக்குட்பட்டு திருவாளர் Sai advertisers நிறுவனத்தால் சென்டர் மீடியன் மற்றும் புதிய கம்பத்துடன் கூடிய தெருவிளக்குகள் பொருத்த அனுமதி வழங்கவும் மாவட்ட ஆட்சியர் சேலம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்
**(ந.க.எண். 4312/2022/இ1)**
**தீர்மான எண்.153 நாள்.30.09.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

**4.** மேட்டூர் நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய திருவாளர்.S.S Enterprises, Coimbatore அவர்கள் விண்ணப்பித்துள்ளார். மேற்படி மனு பரிசீலிக்கப்பட்டதில் மனுதாரர் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய தேவையான ஆவணங்களான சொத்து மதிப்பு சான்றிதழ், வில்லங்க சான்று, சரக்கு மற்றும் சேவை வரிக்கான GST Registration நகல் மற்றும் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய பதிவு கட்டணம் செலுத்தி (இரசீது எண். 047/01/1/22–23/0011188 நாள்.26.08.2022 தொகை:1000/–) அதற்கான இரசீதை இணைத்துள்ளார். எனவே திருவாளர். S.S Enterprises, Coimbatore அவர்களை இந்நகராட்சியில் 5–ம் வகுப்பு ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3977/2022/இ1)**
**தீர்மான எண்.154 நாள்.30.09.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

**5.** மேட்டூர் நகராட்சியில் ஒப்பந்ததாரர் பதிவு செய்ய திருவாளர்.SRI RAMS CONSTRUCTION, METTUR அவர்கள் மனு அளித்துள்ளார். மேற்படி மனு பரிசீலிக்கப்பட்டதில் மனுதாரர் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய தேவையான ஆவணங்களான சொத்து மதிப்பு சான்று, சரக்கு மற்றும் சேவை வரிக்கான GST Registration, வருமானவரி செலுத்தியதற்கான சான்று மற்றும் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய பதிவு கட்டணம் செலுத்தி (இரசீது எண்.047/01/1/22–23/0014148 நாள்.27.09.2022, தொகை: 1000/–) அதற்கான

இரசீதை இணைத்துள்ளார். எனவே திருவாளர்.SRI RAMS CONSTRUCTION அவர்களை இந்நகராட்சியில் 5–ம் வகுப்பு ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4444/2022/இ1)**

**தீர்மான எண்.155 நாள்.30.09.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

**6.** மேட்டூர் நகராட்சி வார்டு எண்.12 எலிக்கரடு மேல் மற்றும் கீழ் பகுதியில் பிரதான குடிநீர் விநியோக குழாய் அமைக்கும் பணிக்கு (ரூ.10.10 இலட்ச மதிப்பீட்டில்) 28.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | M/s.சிவசக்தி விநாயகா கன்ஸ்ட்ரக்சன்ஸ் மல்லிக்குந்தம். | (–)0.09 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | K.கோவிந்தன், பூசாரிப்பட்டி | (+)1.28 % மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.சிவசக்தி விநாயகா கன்ஸ்ட்ரக்சன்ஸ், மல்லிக்குந்தம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (–) 0.09 % குறைவாக கொடுத்துள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண். 3858–7/2020/இ1)**

**தீர்மான எண்.156 நாள்.30.09.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

**7.** மேட்டூர் நகராட்சி சீத்தாமலை நீரேற்று நிலையத்தில் உள்ள கிளாரிபையர் (Clarifier) பழுது மற்றும் பராமரிப்பு பணிக்கு (ரூ.17.00 இலட்ச மதிப்பீட்டில்) 28.09.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திரு.K.கோவிந்தன், பூசாரிப்பட்டி | (–)0.01 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s.சிவசக்தி விநாயகா, கன்ஸ்ட்ரக்சன்ஸ் மல்லிக்குந்தம். | (+)1.06 % மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.கோவிந்தன் பூசாரிப்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (–) 0.01 % குறைவாக கொடுத்துள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண். 3858–6/2020/இ1)**

**தீர்மான எண்.157 நாள்.30.09.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

8. மேட்டூர் நகராட்சி மேற்கு மெயின் ரோடு பகுதியில் தற்போது அமைந்துள்ள பேருந்து நிலையத்திற்கு மாற்றாக சட்ட மன்ற அறிவிப்பில் அறிவிக்கப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தை இந்நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு மெயின் ரோடு தூக்கணாம்பட்டி பகுதியில் (Ward-B, Block -7 TS No.1 5.90 Acer) மாற்றம் செய்திட இந்நகர் மன்ற தலைவர் அவர்கள் விண்ணப்பித்ததின் பேரில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 17.09.2022ந் தேதிய ந.க.எண். 23047/2022 டிபி2 கடிதத்தில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்கள் உரிய அறிக்கை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கு மெயின் ரோடு பகுதியில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தினை இந்நகராட்சிக்கு சொந்தமான தூக்கணாம்பட்டி பகுதியில் மாற்றம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

பேருந்து நிலையத்தினை மாற்றம் செய்வது தொடர்பாக மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண். 1666/2022/இ1)**

**தீர்மான எண்.158 நாள்.30.09.2022**

**தூக்கணாம்பட்டி பகுதியில் பேருந்து நிலையம் மாற்றம் செய்ய நகர்மன்ற உறுப்பினர்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. மேலும் தற்போது பேருந்து நிலையம் செயல்படும் மேட்டூர் மேற்கு மெயின் ரோட்டில் தொடர்ந்து செயல்படவும், அதே இடத்தில் பேருந்து நிலையம் விரிவாக்கம் செய்யவும் நகர்மன்ற உறுப்பினர்களால் ஒரு மனதாக தீர்மானிக்கப்பட்டது.**